# 15-05-2024 செய்தி

## வக்கீல்கள் மீது சேவை குறைபாடு வழக்கு தொடர முடியாது

- வழக்கறிஞர் தொழில் தனித்துவமானது. அந்த பணியின் தன்மை சிறப்பு வாய்ந்தது. அதை மற்ற தொழில்களுடன் ஒப்பிட முடியாது.
- எனவே வழக்கறிஞர்கள் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் வரம்பிற்குள் வரமாட்டார்கள் எனவே வக்கீல்கள் மீது நுகர்வோர் நீதிமன்றங்களில் சேவை குறைபாடு தொடர்பாக வழக்குத் தொடர முடியாது.
- ஒரு வழக்கறிஞர் தனது பணியின்போது தனது சேவைகளை வழங்கும் விதத்தில் வாடிக்கையாளரால் கணிசமான அளவு நேரடிக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்படுகிறது. ஒரு வழக்கறிஞரால் பெறப்படும் சேவைகள் தனிப்பட்ட சேவை என்ற ஒப்பந்தமாக இருக்கும்.
- எனவே, சேவை என்பதன் வரையறையில் இருந்து வக்கீல் தொழிலுக்கு விலக்கு அளிக்கப்படும். எனவே நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019ன் பிரிவு 2 (42) ல் உள்ள சேவை வரையறையின் விலக்களிக்கப்பட்ட பகுதிக்குள் வக்கீல் தொழில் வரும்.
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கம் நுகர்வோருக்கு சரியான நேரத்தில் பயனுள்ள நிர்வாகத்தை வழங்குவது, அவர்களின் தகராறுகளைத் தீர்ப்பது ஆகும்.
- அனைத்து தொழில்களும் சேவை சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டால், வழக்குகள் குவிந்துவிடும்.

## இஸ்ரேல் பிடியில் ரஃபா

- 2023 அக்டோபர் 7 இல் இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்கு இஸ்ரேல் பதில் தாக்குதலை இப்போதுவரை தொடர்ந்துவருகிறது.
- காஸாவில் இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில் 35,000க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.
- காஸாவின் தென் பகுதியில் உள்ள ரஃபா நகர் மீது ராணுவ நடவடிக்கைகளை இஸ்ரேல் தீவிரப்படுத்தி உள்ளது.
- ரஃபாவிலிருந்து வெளியேறி, கடற்கரைப் பகுதியான அல் மகாஸிக்குச் செல்லுமாறு அங்குள்ள மக்களுக்கு இஸ்ரேல் அறிவுறுத்தியுள்ளது.

**ரஃபா மீது தாக்குதல் ஏன்?**

- மே 5 அன்று, ரஃபாவுக்கு அருகே, ஹமாஸ் ஆயுதப் பிரிவினர் நடத்திய வான்வழித் தாக்குதலில் இஸ்ரேலின் நான்கு ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.
- இதையடுத்து, ரஃபாவில் உள்ள ஹமாஸின் நிலைகளின் மீது தாக்குதல் தொடுக்க இஸ்ரேல் திட்டமிட்டது.

**வெளியேறும் பாலஸ்தீனர்கள்:**

- இஸ்ரேல் படையெடுப்பு காரணமாக ரஃபாவில் வசிக்கும் பாலஸ்தீனர்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர்.
- காஸா மீது இஸ்ரேல் படையினரின் கொடூரத் தாக்குதல் தொடங்கியதிலிருந்தே அங்கிருந்து இடம்பெயரும் மக்களை அரவணைக்கும் உயிர் நாடியாக ரஃபா இருந்துவந்தது.
- 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் ரஃபாவில் தங்கியுள்ளனர். இந்நிலையில், இஸ்ரேலின் இந்நடவடிக்கை சொல்ல முடியாத துயரில் அம்மக்களை ஆழ்த்தியிருக்கிறது.
- ரஃபா பகுதி எகிப்தின் எல்லையில் அமைந்திருப்பதால் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நா. உள்ளிட்ட மனித உரிமை அமைப்புகள் அளிக்கும் உணவு, மருந்து போன்ற நிவாரணப் பொருள்கள் ரஃபா வழியாக வந்தடைந்து கொண்டிருக்கின்றன.

**மறுக்கும் இஸ்ரேல்:**

- ரஃபா பகுதியை மனிதாபிமான உதவிகள் கொண்டு செல்லப்பயன்படும் எல்லையாக இஸ்ரேல் பார்க்கவில்லை. மாறாக, பயங்கரவாத நோக்கங்களுக்கான மையமாகவே பார்க்கிறது. ரஃபாவை ஹமாஸின் கடைசிக் கோட்டை என்றே இஸ்ரேல் வரையறுக்கிறது.

**நட்பு நாடுகளுடன் விரிசல்:**

- ரஃபா மீதான தாக்குதல் விவகாரத்தில் அமெரிக்கா தனது அதிருப்தியை வெளிப்படுத்தியிருக்கிறது.

**தொடரும் பேச்சுவார்த்தை:**

- போரை முடிவுக்குக் கொண்டுவர ஹமாஸ், இஸ்ரேல், அமெரிக்கா, கத்தார், எகிப்து பங்கேற்ற கெய்ரோ பேச்சு வார்த்தையில் மூன்று கட்டப் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

1. முதல் கட்டமாக, 40 நாள்களுக்குப் போர் நிறுத்தப்பட்டு, ஹமாஸ் வசம் இருக்கும் பிணைக் கைதிகளில் 33 பேரை விடுவிக்க வேண்டும். இஸ்ரேலும் பாலஸ்தீனச் சிறைக் கைதிகளை விடுவிக்க வேண்டும்.
2. இரண்டாவது, போர் நிறுத்தம் மேலும் 42, நாள்களுக்கு நீடிக்கப்பட்டு, பிணைக் கைதிகள் அனைவரையும் ஹமாஸ் விடுவிக்க வேண்டும்.
3. இறுதியாக, உயிரிழந்த பிணைக் கைதிகளின் சடலங்களை ஹமாஸ் ஒப்படைக்க வேண்டும்.

## சர்ச்சைக்குரிய ரஷிய பாணி மசோதா

- தென்மேற்கு ஆசியாவில் அமைந்துள்ள முன்னாள் சோவியத் யூனியன் நாடான ஜார்ஜியாவில், ரஷிய பாணி மசோதா என்று விமர்சிக்கப்படும் சர்ச்சைக்குரிய வெளிநாட்டு செல்வாக்கு மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
- அந்த நாட்டில் செயல்படும் ஊடகங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் 20 சதவீதத்துக்கும் மேல் வெளிநாடுகளில் இருந்து நிதி பெற்றால், வெளிநாட்டு சக்திகளின் நலன்களுக்காக இயங்கும் அமைப்பு என்று தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று அந்த மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இதன் மூலம், அண்டை நாடான ரஷியாவைப் போலவே, அரசுக்கு எதிரான கருத்துகளை நசுக்க முயல்வதாகவும் ஊடக சுதந்தரம் பறிக்கப்படுவதாகவும் ஒரு தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.
- கிரெம்ளின் (ரஷிய அதிபர் மாளிகை) கொள்கைகளைப் பின் பற்றி இந்த சட்ட மசோதாவை ஜார்ஜியா அரசு உருவாக்கியுள்ளது.